முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1541

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**18.12.2023**, திங்கட்கிழமை

1. கலியுகம் மீட்கவந்த குருராஜனே
கலித்துன்பங்களை விரட்டவந்த மகா தவசியே
பழிபாவம் உலகோர் அடையாத வண்ணம்
பாதுகாப்பாய் ஞான வழிகாட்ட
2. வழிகாட்ட ஓங்காரக்குடில் படைத்து
வையகத்தைக் காக்கும் குருராஜனே அரங்கனே
அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் மார்கழி மாதம் 02 ம் நாள், 18.12.2023, திங்கட்கிழமை)
3. வரமென உன்னோடு யாமிருந்து
வையகத்தை பாதுகாத்து வர
வருகவே அரங்கன் நீ தரும்
அமுது அருளமுதாகும்
4. ஆற்றல்பட இதை உண்டு
அகிலத்தார் உன் திருவடி பற்றி பூஜித்துவந்தால்
வருவோர்க்கு பிணி கட்டங்கள் விலகி ஓடும்
வருங்காலம் பிறவி என்பதே இனி இல்லாத நிலைகளும் உருவாகக்கூடும்
5. கூடவே மாதவசியாய் குருவாய்
குவலயத்தில் என் சக்தியாய்
குறைபோக்கும் மகா தீட்சை அருளுகின்ற
அருளுகின்ற குரு ராஜனே அரங்கனே
6. அப்பனே உந்தன் பார்வை பட்ட மக்களுக்கு
பாவ கர்மா ஒழிவதோடு பாதுகாப்பான வாழ்வும் உருவாகும்
ஆதலால் அரங்கன் தேர்வு செய்யும் அன்பர்களுக்கு
அகிலத்தில் ஆக்கம் கூடும் உலகையே மாற்றும் வல்லமையும் உண்டாகும்

7. ஆக ஆக்கமுடன் ஆறுமுகன் யான் இந்த அற்புதத்தை நடத்தி வர
அகிலமே அரங்கன் வழி வந்தால்
சடுதி ஞான யுகமும் ஞானஆட்சிக்காலமும்
அரங்கனாலும் அரங்கன் தொண்டர்களாலும் உருவாகும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–